O.S.No.174/2019

20.02.2025
வா.சா.2. திருமதி. கமலம்.க.பெ.தியாகராஜன்
சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் 2ம் வாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. 26.05.1948 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரயபத்திரம் சான்றிட்ட நகல் (அந்த ஆவணம் வா**.**சா**.**ஆ**.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)13.10.2017 தேதியிட்ட 1386 பசலிக்கான புல.எண்.385/5க்கான அடங்கல் சான்றிட்ட நகல் (அந்த ஆவணம் வா**.**சா**.**ஆ**.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 13.10.2017 தேதியிட்ட 1389 பசலிக்கான புல.எண்.362/11, 362/14ஏ-க்கான அடங்கல் சான்றிட்ட நகல் (அந்த ஆவணம் வா**.**சா**.**ஆ**.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 06.10.2017 தேதியிட்ட பட்டா எண்.2409க்கான சிட்டா கணினி நகல் (அந்த ஆவணம் வா**.**சா**.**ஆ**.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 21.08.2019 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் அசல் (அந்த ஆவணம் வா**.**சா**.**ஆ**.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 07.10.2011 தேதியிட்ட ஆவண.எண்.6168/2011-ல் கண்ட கிரய ஆவணம் சான்றிட்ட நகல் (அந்த ஆவணம் வா**.**சா**.**ஆ**.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 03.07.2017 தேதியிட்ட மேலூர் வருவாய் கோட்டாட்சியரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் சார்பு நகல் (அந்த ஆவணம் வா**.**சா**.**ஆ**.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 23.09.2019 தேதியிட்ட மேலூர் வருவாய் கோட்டாட்சியர் எனக்கு அனுப்பிய அழைப்பாணையின் சார்பு நகல் (அந்த ஆவணம் வா**.**சா**.**ஆ**.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 15.04.2008, 07.06.2012 மற்றும் 03.03.2016 தேதியிட்ட முறையே 1417, 1421, 1425 பசலிக்கான கிஸ்தி ரசீதுகள் அசல் (அந்த ஆவணம் வா**.**சா**.**ஆ**.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

**(**குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது**)**